# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.205/2023

## CNR.No.TNCB19000

Date:18.02.2026 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தமிழ்ச்செல்வி | **வயது** | 45 |
| **த/பெ** | **வேலுமணி** | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | **சிறுமுகை** | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th February 2026

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவர் 2022 ம் ஆண்டு இறந்தார். எனது பூமிக்கும் பிரதிவாதிகளின் பூமிக்கும் வரப்பு கிடையாது என்றால் சரிதான் . நான் 3 ஏக்கர் 42 செண்ட்டிற்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் . எனது கணவரை எந்தெந்த தேதியில் பிரதிவாதிகள் தொந்தரவு செய்ததாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் உயிரோடு இருக்கும் வரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை . பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

எனது கணவரோ நானோ தாவா சொத்து ஆக்கிரமிப்பில் உள்ளதாக வட்டாட்சியரிடம் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான் . தாவா சொத்தில் நான் விவசாயம் செய்து வருவதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.